ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2190/24 - 2020 අගෝස්තු මස 25 වැනි අඟහරුවාදා - 2020.08.25
*2190/24 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 25 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி IV(அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### மத்திய மாகாண மாகாண சபை

மத்திய மாகாண சபையின் கௌரவ ஆளுநரின் அறிவித்தல்

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (துணை ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய (திருத்தப்பட்ட) மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் (252 ஆம் அத்தியாயம்) 277 (1அ) ஆம் பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கு அமைய மத்திய மாகாண ஆளுநர் வழக்கறிஞர் லலித் யூ. கமகே ஆகிய நான், மாத்தளை மாநகர சபையின் மேயர் திருத்தப்பட்ட மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் (252 ஆம் அத்தியாயம்) 277 (1) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டதன்படி தவறுகள் ஏதேனும் செய்துள்ளாரா என்பது தொடர்பாக இவ்விளம்பர தினம் தொடக்கம் மூன்று மாத கால வரையறைக்குள் பரிசீலனை செய்து எனக்கு அறிவிப்பதற்காக ஓய்வுபெற்ற நீதித்துறை உத்தியோகத்தர் சரோஜினி குசலா வீரவர்தன அவர்களை நியமிக்கின்றேன்.*

இவ் உத்தியோகத்தருக்கு இப்பரிசீலனை தொடர்பாக பரிசீலனை ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் நியமிக்கப்படுகின்ற ஆணைக்குழுவுக்கான அதிகாரங்கள் உள்ளன.

**வழக்கறிஞர் லலித் யூ. கமகே,**
ஆளுநர்,
மத்திய மாகாணம்.

கண்டி வீதி,
*2020, ஓகத்து 24.*

1A - G 32755 — 27 (2020/08)
*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**மத்திய மாகாண மாகாண சபை**

*மத்திய மாகாண சபையின் கௌரவ ஆளுநரின் அறிவித்தல்*

**1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (துணை ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய (திருத்தப்பட்ட) மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் (252 ஆம் அதிகாரம்) 277 (1ஆ) (அ) (i) ஆம் பிரிவின் கீழ் மேற்கொள்ளப்படும் கட்டளை**

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (துணை ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய (திருத்தப்பட்ட) மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் (252 ஆம் அத்தியாயம்) 277 (1ஆ) (அ) (i) ஆம் பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கு அமைய மத்திய மாகாண ஆளுநர் வழக்கறிஞர் லலித் யூ. கமகே ஆகிய நான், மாத்தளை மாநகர சபையின் மேயராகிய டல்ஜித் நந்தலால் அலுவிஹாரே அவர்களை அக் கடமைகளை நிறைவேற்றுவதில் இருந்து உடனடியாக செயற்படும் வகையில் தற்காலிகமாக இடைநீக்கம் செய்கின்றேன்.*

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (துணை ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய திருத்தப்பட்ட மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் (252 ஆம் அத்தியாயம்) 277 (1ஆ) (அ) (i) ஆம் பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கு அமைய உடனடியாக செயற்படும் வகையில் மத்திய மாகாண மாத்தளை மாவட்டத்தின் மாத்தளை மாநகர சபையின் மேயரின் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கும் மற்றும் அதன் அதிகாரங்களைச் செயற்படுத்துவதற்கும் மாத்தளை மாவட்டத்தின் மாத்தளை மாநகர சபையின் தற்போதைய பிரதி மேயராகக் கடமை புரியும் சந்தனம் பிரகாஷ் அவர்களை நியமிக்கின்றேன்.*

**வழக்கறிஞர் லலித் யூ. கமகே,**
*ஆளுநர்,*
*மத்திய மாகாணம்.*

*கண்டி வீதி,*
*2020, ஓகத்து 24.*

*09-215*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.